திரு. தி. பொன்னுமலை : கிராமாதிகாரிகள் முழு நேர ஊழியர்களாக இல்லாத காரணத்தால் அவர்கள் லோன்களை எல்லாம் வசூல் செய்வதில் கால தாமதமாகிறது. கடன்களை மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு வசூல் செய்வதும், சென்ற ஆண்டுக் கடனை இந்த ஆண்டு, வசூல் செய்வதுமான நிலைமைகள் இருக்கின்றன. கட்டிவிட்டவர்களைக் கூட திரும்பக் கட்டும்படி சொல்லும் நிலை இருக்கிறது. அவர்களை முழு நேர ஊழியர்களாக ஆக்குவதோடு ஒவ்வொரு ஆண்டும் ஆடிட் செய்ய ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : எங்காவது அப்படி கிராம அதிகாரிகள் தவறு செய்தார்கள் என்றால் அதனை அங்கத்தினர் அவர்கள் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : கன்னியாகுமரி ஜில்லாவில் உள்ள கிராம அதிகாரிகள், சர்க்கார் உத்தியோகஸ்தர்களாக நியமனம் பெற்றவர்கள் ஓய்வு பெற்ற பிறகு அவர்களுக்குப் பென்ஷன் வழங்கப்படவில்லை. அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தனிக் கேள்வி போடவும்.

திரு. ஆ. பரந்தாமன் : இந்த கிராமாதிகாரிகள் குவாசி கவர்ன்மென்ட் நிறுவனங்களில் பல பொறுப்புகளில் இருக்கிற காரணத்தால் பல சங்கடங்கள் ஏற்படுகின்றன. இந்தச் சங்கடங்களைத் தவிர்க்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : என்ன சங்கடங்கள் என்று சொல்லவில்லை. சங்கடங்களைத் தெரிவித்தால் அவைகளைப் பற்றி யோசிக்கலாம்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Though these village officers are not permanent Government servants, yet they are hard-working and faithful servants. Considering their faithfulness will the Government consider giving them provident fund or pension benefits?

THE HON. THIRU P. U. SHANMUGHAM : There is no such proposal now.

பட்டாக்கள் வழங்கல்.

* 56. வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

பட்டாக்கள் வழங்கும் முழு அதிகாரத்தையும் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் ஒப்படைக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இல்லை.

திரு. சு. துரைசாமி: பட்டாக்கள் வழங்குவதில் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு முழு அதிகாரமும் இல்லாததன் காரணமாக ரெவின்யூ போர்டுக்கு வந்து நாலைந்து வருஷ காலம் கடந்து விடுகிறது. அந்தக் குறைபாட்டைப் போக்க மாவட்ட ஆட்சித் தலைவருக்கே பட்டா வழங்குவதற்கான அதிகாரித்தைக் கொடுக்க அரசு முன்வருமா ?

1971 அக்டோபர் 25]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: சில ப்ரோகிபிட்டரி புக் என்ட்ரி போட்டிருக்கும் நிலங்கள் தவிர மற்றவற்றுக்கு பட்டா வழங்கும் நிலை இப் போதே இருக்கிறது. ஒவ்வொருவருக்கும் உயர்நத அளவு நிர்ணயிக்கப்பட் டிருக்கிறது. தாசில்தார் மூன்று ஏக்கர் வரை புஞ்சை நிலமாக இருக்குமானுல், ஆயிரம் ரூபாய் மதிப்புக்குக் கீழ் இருக்குமானுல் பட்டா வழங்கலாம். ஆர்.டி.ஓ. மூன்று ஏக்கர் புஞ்சை, ஒன்றரை ஏக்கர் நஞ்சை, இரண்டாயிரம் ரூபாய் மதிப்புக்குக் கீழ் இருக்குமானுல் பட்டா வழங்கலாம். மாவட்ட ஆட்சித் தலைவர் ஐயாயிரம் ரூபாய் மதிப்பு வரை பட்டா வழங்கலாம் என்று அதிகாரம் தரப்பட்டிருக்கிறது. ரெவின்யூ போர்டுக்கு 10,000 ரூபாய் வரை அனுமதி தரப்பட்டிருக்கிறது. அதற்கு மேல் போகுமானுல் அரசாங்கத்திற்கு வரவேண்டும்.

திரு. எம். செல்வராஜ்: பட்டா வழங்கும் முறையில் சில நேரங்களில் அதி காரிகளுக்குச் சங்கடம் ஏற்படுகிறது. பொதுவாக, கூட்டுப் புறம்போக்கு, காட்டுப் புறம்போக்கு, தோப்புப் புறம்போக்கு பிரயோசனப்படுத்தப்படாமல் இருக்கிறது என்று கருதி பட்டா வழங்க வேண்டுமென்று சொன்னுல் அங்கிருக் கும் வட்ட தாசில்தார்களும், ஆர்.டி.ஓ. க்களும் டி.ஆர்.ஓவுக்கு எழுதி அவர் வந்து பார்வையிட வேண்டுமென்று இருக்கிறது. இந்த நிலை இல்லாது ஆர்.டி.ஓ. அளவிலேயே பார்த்து உடனடியாகப் பட்டா வழங்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இவ்வளவு கடுமையான விதிகள் இருந்துமே சில இடங்களில் தவறுகள் நடந்து விடுகின்றன. தவறுகள் நடக் கக்கூடாது என்பதற்காகத்தான் இந்த விதிகள் இருக்கின்றன.

திரு. கா. காளிமுத்து: ரெவின்யூ அதிகாரிகள் புறம்போக்கு நிலங்களுக் கான பட்டா பெற்றுக் கொண்டிருந்தால் அவற்றை திரும்பக் கொடுத்துவிட வேண்டுமென்று அரசு அறிக்கை அனுப்பிய பிறகும், இன்னும் சில அதிகாரிகள் அவற்றைத் திரும்பிக் கொடுக்காமல் இருக்கிருர்கள் என்பது அரசின் கவனத் திற்கு வந்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அப்படி இன்னும் வைத்துக் கொண் டிருக்கிறவர்களுக்கு அரசாங்கம் மீண்டும் தாக்கீது அனுப்பி பதில் கிடைத்த பிறகு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கே. என். குமாரசாமி: இப்போதுள்ள சில விதிமுறைகள் எல்லாம் பிரிட்டிஷ்காரர் காலத்திலிருந்து வந்தது. இப்போது கால வளர்ச்சிக்கு ஏற்ப ஆங்காங்கு அதிகமான மக்களுடைய வேலையில்லாப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் ஆங்காங்குள்ள மாவட்ட கலெக்டருக்கே பட்டா வழங்கு வதற்கான முழு அதிகாரத்தையும் கொடுக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இப்போது இருக்கும் முறையில் சங்கடங்கள் இல்லை, காலதாமதம் ஏற்படுவதாக அரசுக்குத் தகவல் இல்லை. தொடர்ந்து காலதாமதம் இருக்குமானுல் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. சு. துரைசாமி: ஏறத்தாழ 1966-ம் ஆண்டுக்கு முன்பாக திருப்பூரில் இருக்கும் குறிப்பிட்ட பகுதியில் மாவட்ட வருவாய்த் துறை அதிகாரி அவர்கள் ஒருவருக்குப் பட்டா கொடுத்தார். அதற்கு முன்பு சப் கலெக்டர் மூன்றுள்

இராணுவத்தினருக்கு பட்டா கொடுத்தார். இந்த விவகாரம் வருவாய்த் துறைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. இன்னும் முடிவு எடுக்கப்படவில்லை. இந்த இடைவெளியில் சிலர் வீடு கட்டிக் கொண்டார்கள். இப்போது பட்டா யாருக்கு என்று தெரியவில்லை. ரெவின்யூ போர்டு இதிலே விரைவாக முடிவு எடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இவ்வளவு கட்டுப்பாடுகள் வைத்திருக்கும்போதே தவறுதல்கள் ஏற்படுகின்றன என்பதுதான் அங்கத்தினர் அவர்கள் சொன்னதிலிருந்து தெரிகிறது. இந்தத் தனிப்பட்ட விவகாரத்தைப் பற்றி அரசு பரிசிலிக்கும்.

திரு. தொ. ப. சீனிவாசன்: பஞ்சாயத்து தரிசு புறம்போக்கு நிலங்களைத் தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பட்டா செய்து கொடுக்க சட்ட விதிமுறை இருக்கிறது. அப்படி பட்டா செய்து கொடுத்ததை நீண்ட நாளைக்கு பிறகு மீண்டும் விற்கும்போது அதே தாழ்த்தப்பட்ட மக்களுக்குத்தான் விற்க வேண்டுமென்றிருப்பதால் நல்ல விலை கிடைக்கமாட்டேன் என்கிறது. சரியான விலை போகாததால் தாழ்த்தப்பட்டவர் அல்லாத வேறு ஒருவருக்கு விற்பதற்கு அரசு வழி செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அது இயலாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மா. வே. நாராயணசாமி: சென்னை நகரத்தையொட்டி 20 மைல் சுற்றளவுக்குப் பட்டாக்கள் கொடுக்கப்படுவது இல்லையென்ற ஒரு நிலை இருந்து வருகிறது. நீண்ட நாட்களாக, 20, 30 ஆண்டு காலமாக மக்கள் குடியிருக்கக் கூடிய பகுதிகளைப் பொருத்தவரை தனியாகப் பரிசிலித்து பட்டா வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: சென்னையைச் சுற்றி இருக்கும் பகுதிகளில் பட்டா கொடுக்கக்கூடாது என்று அரசாங்கம் தடை விதித்திருக்கிறது. அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல் நீண்டகாலமாக இருப்பார்களேயானால் மாவட்ட ஆட்சித் தலைவர் சிபாரிசு செய்தால் அரசு அதுபற்றிப் பரிசிலித்து முடிவு எடுக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. நா. கிருட்டிணன்: நிலமில்லாத ஏழை விவசாயிகள் காட்டுக்கு அருகாமையிலுள்ள நிலங்களில் 30, 40 ஆண்டுகளாக விவசாயம் செய்து வருகிறார்கள். ஆனால் அவர்களுக்கு நிலம் பட்டா செய்து கொடுக்கும்போது 140 அடி தொலைவில் காட்டுப் பகுதிகளுக்கு அப்புறமுள்ள இடங்களில் உள்ள நிலங்களைத்தான் பட்டா செய்ய வேண்டுமென்று விதிமுறைகள் இருப்பதாக கலெக்டர் அவர்கள் கூறுகிறார்கள். ஆகவே அதை மாற்றியமைத்து காட்டு இலாகாவிற்கு சொந்தமாக இல்லாத காட்டோரமுள்ள நிலங்களை விவசாயிகளுக்குப் பட்டா செய்து கொடுக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ சண்முகம்: உறுப்பினர் அவர்கள் கூறக்கூடிய இடம் எது என்று தெரியவில்லை. அதைப் பற்றித் தனியாக எழுதியனுப்பினால் பரிசிலிக்கலாம்.

1971 அக்டோபர் 25]

THIRU K. M. SUBRAMANIAM : Is the Government aware that in the Government plots allotted on lease basis to the people, they are not able to construct any pucca houses because of non-issue of pattas? They are on lease basis till now and for many years they are on lease basis. Will the Government now think of giving pattas to those people who have been allotted developed plots on lease basis?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அது நிலத்தின் இடத்தைப் பொறுத்திருக்கிறது. சிலயிடங்கள் அரசுக்குத் தேவை என்ற காரணத்தினால் அடமானம் செய்யமுடியாத காரணத்தினால் வாடகைக்கு விடப்பட்டிருக்கின்றன. அப்படி விடப்பட்டிருக்கிற இடங்களை பட்டா செய்து கொடுக்கும் உத்தேசம் இப்போது அரசாங்கத்தினிடம் இல்லை.

திரு. இராம. அரங்கண்ணல் : சென்னை மாநகரில் லீஸ்-கம்-சேல் என்ற அளவில் 124 இடங்கள்தான் இருக்கின்றன. அவைகளைப் பற்றிய சட்டமுறைகளை எல்லாம் ஆராய்ந்து ஒரு முடிவிற்கு குடிசை வாரியம் வந்திருப்பது அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : உறுப்பினர் அவர்கள் தெரிவித்த இந்த விவரத்தை மற்ற உறுப்பினர்கள் புரிந்து கொண்டிருப்பார்கள் என்று நம்புகிறேன்.

MR. SPEAKER : Is he answering or putting a question? He is answering in the question from. I think.

THIRU K. M. SUBRAMANIAM : Is the Government aware that there are about 4,000 to 5,000 Government—developed plots allotted to people on rental basis in Madras City by the Housing Board and they are not yet sold to these people in spite of various demands and because of that they are not able to construct pucca houses? Is the Government. . . .

MR. SPEAKER : This does not concern the Minister.

பெரியார் இராமசாமியவர்கள் பிறந்த நாள்

* 46 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?

பெரியார் இராமசாமி அவர்களின் பிறந்த நாளை அரசாங்க விடுமுறை நாளாக அறிவிக்க திட்டம் ஏதேனும் அரசு பரிசிலனையிலுள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இல்லை.

திரு. நா. வீராசாமி : பெரியார் அவர்கள் இந்த நாட்டில் ஒரு மறுமலர்ச்சியை உண்டாக்கியிருக்கிறார்கள். விடுமுறை அளிக்காவிட்டாலும் ' காம்பன்ஸேட்டரி ஹாலிடே ' என்று அந்த நாளில் விடுமுறை அளித்துவிட்டு ' செகன்ட் சாட்டர்டேயை வொர்க்கிங் டே ' ஆக ஆக்குவதற்கு அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பெரியார் அவர்கள் ஓய்வின்றி உழைப்பதையே விரும்புகிறவர்கள். ஆகவே இதை அவர்களே விரும்ப மாட்டார்கள்.